www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# தொகுத்தறி மதிப்பீடு – பருவம் II
## தமிழ் – 2024 – 2025
## வகுப்பு – 5

பெயர் : ______________________ மதிப்பெண் : 60

பிரிவு : ______________________ நேரம் : 2 மணி

**1. அடிக்கோடிட்ட சொல்லுக்குரிய பொருளிற்கு (✓) குறியிடுக.** 5×1=5

அ) கெட்டிலின் மூடியிலிருந்து நீராவி __வேகமாக__ வெளிவரத் தொடங்கியது.
 அ) மெதுவாக ஆ) விரைவாக இ) கவனமாக ஈ) மெலிதாக

ஆ) அன்புடைமை __ஆன்ற__ குடிப்பிறத்தல்.
 அ) உயர்ந்த ஆ) பொலிந்த இ) அணிந்த ஈ) அயர்ந்த

இ) குழந்தைகள் விதைத் திருவிழாவிற்குச் செல்ல __அனுமதி__ பெற்றனர்.
 அ) கட்டளை ஆ) இசைவு இ) வழிவிடு ஈ) உரிமை

ஈ) __வையகம்__ முழுதும் வாழியவே.
 அ) ஊர் ஆ) உலகம் இ) வைகறை ஈ) கிராமம்

உ) முல்லை நிலமே ஏறுதழுவுதலுக்கு __உகந்த நிலம்__.
 அ) ஏற்ற நிலம் ஆ) களர் நிலம் இ) தரிசு நிலம் ஈ) வயல்வெளி

**2. தொடரில் உள்ள பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களை எடுத்து எழுதுக.** 5×1=5

கண்மணி பூங்காவிற்குச் சென்றாள்; அங்கு ஊஞ்சல் ஆடினாள்.

**பெயர்ச்சொற்கள் :** ______________________

**வினைச்சொற்கள் :** ______________________

**3. தொடரில் அமைத்து எழுதுக.** 5×1=5

அ) [illegible] – ______________________

ஆ) சிலம்பம் – ______________________

இ) பேருந்து – ______________________

ஈ) உழவு – ______________________

உ) விளம்பரம் – ______________________

**4. பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுக.** 5×1=5

அ) எல்லையில்லாப் ________ (பறவை / பரவை) பரந்துவிரிந்து காட்சியளிக்கிறது.

ஆ) மலையை நோக்கிச் சத்தமிட்டதும் ________ (எதிரொளி / எதிரொலி) கேட்டது.

இ) தேயிலை சேர்த்துக் கொதிக்க வைத்த ________ (தேநீர் / தேனீர்) எங்கே?

ஈ) இனிப்பான ________ (வெள்ளம் / வெல்லம்) வாங்கினேன்.

உ) குளக்கரையில் ________ (தவலை / தவளை) தாவிக் குதித்தது.



Scanned with CamSc
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**5. சரியான சொல்லால் நிரப்புக.** 5×1=5

(அது, நீ, அவள், அவர்கள், அவன்)

கண்ணன் கடைக்குச் சென்றான். அங்கு ______________ நண்பனின் தங்கை மதியைப் பார்த்தான். ______________ கண்ணனைப் பார்த்து, அண்ணா ______________ எப்படி இருக்கிறாய்? எனக் கேட்டாள். ______________ இருவரும் கடையில் பொருள்கள் வாங்கிக் கொண்டு நடந்தனர். அப்போது கிளி ஒன்று பறந்து வந்தது. ______________ கண்ணனின் தோளில் அமர்ந்தது.

**6. பத்திக்குப் பொருத்தமான இணைப்புச் சொல்லை எடுத்து எழுதுக.** 5×1=5

(அல்லது, ஆனால், மட்டும், ஆகவே, ஏனெனில்)

முகிலன் தன் செல்லப்பிராணி சிக்குவிடம், நான் பாட்டி ஊருக்குச் செல்கிறேன்; ______________ உன்னை அழைத்துச் செல்ல முடியாது; ______________ உன்னைப் பேருந்தில் அழைத்துச் செல்ல அனுமதி இல்லை. ______________ நீ கவனமாக இரு. என் தம்பியுடன் சேர்ந்து விளையாடு ______________ ஓய்வெடு. வீட்டின் பின்புறம் உள்ள பள்ளத்தின் அருகே ______________ சென்றுவிடாதே.

**7. தொடர்களை வரிசைப்படுத்தி எண் இடுக.** 5×1=5

அ) அங்கே பலவகையான மரம், செடி, கொடிகளைக் கண்டு மகிழ்ந்தாள். ☐

ஆ) தன் வீட்டில் இதுபோன்ற செடிகளை வளர்க்க எண்ணினாள். ☐

இ) தன்னுடைய வீட்டைச் சுற்றி அச்செடிகளை நட்டு வளர்த்தாள். ☐

ஈ) யாழிசை பூங்காவிற்குச் சென்றாள். ☐

உ) பூங்காவில் உள்ள விற்பனையகத்தில் சில செடிகளை வாங்கினாள். ☐

**8. அறிவிப்பைப் படித்து விடை எழுதுக.** 5×1=5

**மாமதுரையில் மாபெரும் பொருட்காட்சியைக் காண வாரீர்! வாரீர்!**

**இடம் : தமுக்கம் மைதானம்** **நாள் : 17.12.2024**

- *சிறுவர்களுக்கான புதிர்ப் போட்டிகள்*
- *கதை சொல்வதற்கான கதையரங்கம்*
- *ஓவியங்களுக்கான காட்சியரங்கம்*
- *குழந்தைகளுக்குப் பிடித்த உணவரங்கம்*
- *குழந்தைகளுக்குத் தேவையான எழுதுபொருள் அரங்கம்*

**நுழைவுக் கட்டணம் : ₹20**

**பள்ளிக் குழந்தைகளுக்கு மட்டும் அனுமதி இலவசம்!**

**(அடையாள அட்டை அவசியம்)**

அ) வளவன் தனக்குப் பிடித்த வண்ண அழிப்பானை எங்கு வாங்கியிருப்பான்?

______________________________________________

ஆ) 17.12.2024 அன்று மதுரையில் ______________ நடைபெற உள்ளது.

இ) பொருட்காட்சியில் இடம்பெற்றுள்ள அரங்கங்களை எழுதுக.

______________________________________________



Scanned with CamSc
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

ஈ) கல்லூரியில் படிக்கும் அருண் கலையரங்கத்திற்குச் செல்கிறான் எனில், நுழைவுக் கட்டணம் செலுத்த வேண்டும். சரி ☐ தவறு ☐

உ) பள்ளியில் படிக்கும் மீனாவிற்கு இலவச அனுமதி கிடைக்கவில்லை? ஏன்?

---

9. பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறியிட்டு எழுதுக. 1×5=5

சுந்தரவனம் கிராமத்தில் கவின் நவீன் இருவரும் நண்பர்கள் இவர்கள் மலையேற்றக் குழுவுடன் இணைந்து மலை ஏறினர் மலை ஏறும் வழியில் பூத்திருந்த குறிஞ்சிப்பூவைப் பார்த்த நவீன் எவ்வளவு அழகு என வியந்தான்

---

---

---

---

10. நிகழ்ச்சி நிரலைப் படித்து விடை எழுதுக. 5×1=5

வட்டார அளவில் கபடி விளையாட்டு – நிகழ்ச்சி நிரல்

இடம் : அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, நாகப்பட்டினம். நாள் : 15.12.2024

| நேரம் | வட்டார அளவிலான போட்டிகள் |
|---|---|
| காலை 7.45 – 8.00 | போட்டியாளர்கள் பெயர் பதிவு செய்தல் |
| காலை 8.00 – 8.15 | போட்டிக்கான விதிமுறைகளைக் கூறுதல் |
| காலை 8.15 – 9.30 | முதல் சுற்றுப்போட்டி |
| காலை 9.30 – 10.00 | சிற்றுண்டி இடைவேளை |
| காலை 10.00 – 10.15 | முதல் சுற்று வெற்றியாளர்கள் அறிவிப்பு |
| காலை 10.15 – 12.30 | இரண்டாம் சுற்றுப்போட்டி |
| நண்பகல் 12.30 – 12.45 | போட்டி முடிவு அறிவிப்பு, பரிசளிப்பு |

அ) வட்டார அளவில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டி எது?

---

ஆ) நிகழ்ச்சி எப்போது நிறைவு பெற்றது?

---

இ) இரண்டாம் சுற்றுப் போட்டியில் பங்கு பெறுவோர் யார்? ✓ குறியிடுக.

அ) முதல்சுற்று வெற்றியாளர்கள் ☐ ஆ) அனைத்துப் போட்டியாளர்கள் ☐

ஈ) போட்டியில் பங்கு பெற முதலில் செய்ய வேண்டியது என்ன?

---

உ) பள்ளி அளவில் நீங்கள் கலந்து கொண்ட விளையாட்டுப் போட்டிகளின் பெயர்களை எழுதுக.

---



Scanned with CamSc

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

11. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் சொற்களை எடுத்து எழுதுக. 5×1=5

சுமதி தன் தந்தையுடன் தடதடவெனச் சென்ற தொடர் வண்டியில் ஏறி மதுரையில் நடந்த புத்தகத் திருவிழாவிற்குச் சென்றாள். அங்கே பளபளவென்று இருந்த அரங்கங்களைக் கண்டு வியந்தாள். அவளுக்கு மிகவும் பிடித்த வண்ணவண்ணப் படங்களுடன் கூடிய கதைப் புத்தகங்களைத் தேடித்தேடி வாங்கினாள். மாலையில் நடைபெற்ற கருத்தரங்கம் மற்றும் கலைநிகழ்ச்சிகளைக் கண்டு கலகல எனச் சிரித்து மகிழ்ந்தாள். பின்பு, மன மகிழ்வுடன் வீடு திரும்பினாள்.

| இரட்டைக்கிளவி | அடுக்குத்தொடர் |
|---|---|
| | |

12. கலைத் திருவிழாவில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்று நீங்கள் பரிசு பெறவிருக்கும் விழாவிற்கு உங்கள் நண்பனை அழைத்துக் கடிதம் எழுதுக. 1×5=5

இடம் : விழுப்புரம்
நாள் : ________

அன்புள்ள நண்பனுக்கு, (3)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

இப்படிக்கு,
உன் அன்புள்ள நண்பன்,
________

உறைமேல் முகவரி (2)

________________________

________________________

________________________



Scanned with CamSc
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com